<u>வெளி–1: 12</u>

*"அப்பொழுது என்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன். திரும்பினபோது, ஏழு பொன் குத்துவிளக்குகளையும்"*

# சபை பார்க்கப்படும் விதம்:

Pr. K.Joseph

அப்போஸ்தலனாகிய யோவான் முதலாவது ஒரு பெரும் சத்தத்தைக் கேட்டார் (<u>வெளி–1: 10,11</u>) *"அது: நான் அல்பாவும் ஓமெகாவும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன். நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு* ***சபைகளுக்கும்*** *அனுப்பு என்று விளம்பினது"*.

**சபைகளுக்கு** அனுப்பு என்ற சத்தத்தை யோவான் கேட்கிறார். அந்த நாட்களில் பல இடங்களில் சபைகள் இருந்தன. <u>வெளிப்படுத்தின விசேஷம் 2 மற்றும் 3</u> அதிகாரங்களில் அந்த சபைகளின் குணாதிசயங்களைக் குறித்தும் அவைகளிடம் இயேசு கிறிஸ்துவின் எதிர்பார்த்தலைக் குறித்தும் நாம் பார்க்கிறோம். அவைகளைக் குறித்து பிறகு பார்க்கலாம்.

யோவான் சத்தத்தைக் கேட்டவுடன் தன்னுடனே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்புகிறார். திரும்பினபோது அவர் முதலாவது பார்த்தது 7 பொன் குத்துவிளக்குகள், **குத்துவிளக்குகள்** என்பது தனித்தனியாக உள்ள 7 விளக்குகள் அல்ல, மாறாக ஒரு முக்கியமான ஸ்டாண்டில் (தண்டு) இருக்கிற 7 கிளைகளைக் கொண்ட ஒரு பெரிய விளக்காகும். அதைக் குறித்த ஒரு படத்தை இங்கே பார்த்தால் உங்களுக்கு ஒரு தெளிவு கிடைக்கும்.

எனவே இதை குத்துவிளக்குகள் என்று சொல்வதைவிட விளக்குத் தண்டுகள் என்று சரியாக மொழிபெயர்க்கலாம். ஆங்கிலத்தில் இதற்கு Lampstands என்றுதான் உள்ளது. இந்த விளக்குத் தண்டுகள் எதைக் குறிக்கின்றன என்பதன் அர்த்தத்தைக் குறித்து இயேசுவே <u>வெளி–1: 20ல்</u> தெளிவுபடுத்துகிறார்: <u>*நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்.*</u>

சபையை மக்கள் பார்த்த விதத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட பார்வையை தேவன் யோவானுக்கு வெளிப்படுத்துகிறார். தேவன் கொடுக்கும் வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள ஆவிக்குள்ளாகும் செயல்பாடு வேண்டும். ஆவிக்குள்ளானபோது தான் தேவனுடைய வெளிப்பாடுகளை யோவான் பெற ஆரம்பித்தார். இந்த நாட்களில் நாம் அதிகமாக மாம்சத்தில் வாழ்கிறவர்களாக இருக்காமல் ஆவியின்படி நடக்கிறவர்களாக, ஆவியின் சிந்தையை உடையவர்களாக வாழ்ந்திட பிரயாசப்படுவோமாக.
ஆவி மண்டலத்திலே சபை எப்படிப் பார்க்கப்படுகிறது? தேவன் சபையை எப்படிப் பார்க்கிறார்? என்று நாம் அறிந்து, சபையை தேவன் பார்க்கும் விதத்திலே நாமும் பார்க்க ஆரம்பித்துவிட்டால், அவர் நம்மிடம் எதிர்பார்ப்பதையும், நம்மையே நாம் பார்க்க வேண்டிய விதத்தையும் தேவன் நமக்குத் தெளிவுபடுத்த ஆரம்பித்துவிடுவார்.

**விளக்கு** மற்றும் **தண்டுகள்** என்ற இரண்டு வேறுபட்ட வார்த்தைகளைக் கவனிக்கவும். விளக்கு என்பது எதைக் குறிக்கிறது, தண்டுகள் என்பது எதைக் குறிக்கிறது என்று தேவன் நமக்கு வெளிப்படுத்துவாராக!

**விளக்கு / தீபம் என்பது:**

1. பரிசுத்த ஆவியானவர்

விளக்கைக் குறித்து வெளிப்பாடு–4: 5ல் "*ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன*" என்றும் அது **பரிசுத்த ஆவியானவரைக்** குறிக்கிறது என்றும் நாம் அறிந்துகொள்கிறோம். விளக்கு ஒளிகொடுக்கிற வேலைக்கென்றும், இருட்டில் காணாமல் போனதைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கும் பயன்படுகிறது. **லூக்கா–15: 8**ல் ஒரு பெண் தன்னிடத்திலிருந்த 10 வெள்ளிக் காசுகளில் ஒன்று காணாமல் போனபோது விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி அதைக் கண்டுபிடிக்கும் வரை தேடினால் என்ற ஒரு உவமையைப் பார்க்கிறோம்.

2. தேவனுடைய வசனம்:

அதேபோல சங்கீதம்–119: 105ன் படி தேவனுடைய வசனமும் தீபத்திற்கு ஒப்பிடப்பட்டிருப்பதைக் காண்கிறோம். நாம் நடக்க வேண்டிய பாதையைக் காட்டும் தீபமாக தேவனுடைய வார்த்தை இருக்கிறது. கால்கள் தடுமாறாதவாறு, தவறான பாதையில் நாம் செல்லாதவாறு நம்மைக் காத்து நமக்குச் சரியான பாதையைக் காட்ட தேவனுடைய வார்த்தை பயன்படுகிறது. தேவனுடைய வார்த்தை காட்டும் பாதையில் செல்பவர்கள் ஒருபோதும் இடறுவதில்லை. நீதியின் பாதையில், சத்தியத்தின் பாதையில், சரியான பாதையில் நம்மை நடத்திச் செல்ல தேவன் தமது வார்த்தையைப் பயன்படுத்துகிறார்.

**விளக்குத் தண்டுகள்:** (Stands)

இது சபையைக் குறிக்கிறது. சபையானது விளக்கை உடையதாக இருக்க வேண்டும், சபையில் விளக்கு எரிந்துகொண்டிருக்க வேண்டும்.

- ஆவியானவர் இல்லாத சபைகள் வெறுமனே தண்டாக மாத்திரம் தான் இருக்கிறது.
- ஆவியானவரைப் பெற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படாத சபைகள் விளக்கு அல்லது தீபம் எரியவிடப்படாத, ஒளிகொடுக்காத, வெளிச்சமற்ற சபைகளாகவே இருக்கின்றன.
- ஒரு தனிநபராகவும், பலர் ஒன்றுசேர்ந்திருக்கும் குழுவாகவும் நாம் கிறிஸ்துவின் சபையாக இருக்கிறோம். சபை என்பது ஒரு கட்டிடம் அல்ல, ஒரு ஸ்தாபனம் அல்ல, ஒரு நிறுவனம் அல்ல. மாறாக நாம் தான் சபையாக இருக்கிறோம். நம்முடைய வாழ்வில் ஆவியானவரின் நடத்துதல் எந்த அளவுக்கு இருக்கிறது?

**ஆவியானவர் செயல்பாட்டில் இருந்தால்:**

- ❖ யோவான்–16: 8 *அவர் வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.*
- ❖ யோவான்–16: 13 *சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்*
- ❖ *அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்வார்*
- ❖ *வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.*
- ❖ யோவான்–16: 14 *என்னை மகிமைப்படுத்துவார்.*

❖ யோவான்-16: 15 *அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்*

விளக்கைத் தாங்கி நிற்கும் தண்டானது அந்த விளக்கை எரிய வைப்பதற்கு எண்ணெயை உடையதாக இருக்க வேண்டும். விளக்கு தொடர்ந்து எரிய வேண்டுமெனில் எண்ணெய் மிகவும் அவசியம். எண்ணெய் இல்லாத விளக்கு விரைவில் அணைந்துபோகும்.

மத்தேயு-25: **பத்துக் கன்னிகைகளைக் குறித்த உவமை**
ஐந்துபேர் புத்தியுள்ளவர்கள்
ஐந்துபேர் புத்தியில்லாதவர்கள்

இரு குழுவினருக்குமிடையே காணப்பட்ட வித்தியாசம் என்ன?
இரு குழுவினரிடமும் விளக்கு இருந்தது
ஆனால் புத்தியுள்ளவர்கள் விளக்கையும் எண்ணெயையும் உடையவர்களாக இருந்தார்கள்,
புத்தியிள்ளாதவர்களோ விளக்கை உடையவர்களாக இருந்து, எண்ணெயைக் கூடக்கொண்டுபோகவில்லை (மத்தேயு-25: 3)

விளக்கு என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்குமானால், எண்ணெய் என்பது எதைக் குறிக்கிறது? இது இயேசு கிறிஸ்துவோடுள்ள நெருக்கமான ஐக்கிய உறவைக் குறிக்கிறது. அதைக் குறித்து வரும் நாட்களில் நாம் அதிகமாகப் பார்க்கலாம்.

ஜெபிப்போமா!
அன்பு நிறைந்த தகப்பனே!
எங்களோடு வாசம்பண்ணி எங்களுக்குள்ளே உலாவுகிறவராக இருக்கும்படி பரிசுத்த ஆவியானவரை எங்களுக்குத் துணையாளராக, தேற்றரவாளனாகத் தந்தீரே உமக்கு நன்றி. ஆவியானவரை உடையவர்களாகவும், ஆவியானவரால் நடத்தப்படுகிறவர்களாகவும் நாங்கள் இருக்க வேண்டும் என்றும், சபை என்பது இதுவரை நாங்கள் பார்த்த ஒரு பாரம்பரிய முறையைப் போல் அல்ல, நீர் பார்க்கிறபடி விளக்கைச் சுமந்து வெளிச்சம் கொடுக்கிற விளக்குத் தண்டாக இருக்க வேண்டும் என்ற ஆவிக்குரிய பார்வையை எங்களுக்குத் தருவீராக! நாங்கள் ஆவியானவருக்கும் தேவனுடைய வசனத்துக்கும் செவிகொடுத்து வாழந்திட எங்களுக்கு உதவிசெய்வீராக! இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் அன்பின் நல்ல தகப்பனே, ஆமென்!